# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/23 - 2015 දෙසැම්බර් මස 30 වැනි බදාදා - 2015.12.30

*1947/23 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)*

*1988 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 103ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2016, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு, பிரயாணி பற்றிய தகவலினை முன்கூட்டியே அறிக்கையிடல் (இலத்திரனியல்) ஒழுங்குவிதிகளை இத்தால் பிரசுரிக்கின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2015, திசெம்பர் 30.*

**ஒழுங்குவிதிகள்**

1. *இந்த ஒழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பிரயாணி பற்றிய தகவலினை முன்கூட்டியே அறிக்கையிடல் (இலத்திரனியல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் (இதனகத்துப்பின்னர் "செயற்பாட்டுத் திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) என்பதுடன் இவ்வொழுங்குவிதிகளானது 2016 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.*

2. *இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக "வானூர்தி இயக்குநர்" எனும் பதம் விமான நிறுவனங்கள் நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்துபவர் அல்லது விமான நிறுவனத்தின் நிலைய முகாமையாளர் போன்றோர்களை உள்ளடக்கும்.*

**பகுதி 1**

**விமான இயக்குநர்களை பதிவு செய்தல்**

3. *இலங்கையிலுள்ள விமான நிலையங்களில் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விமானங்களை இயக்குகின்ற விமானங்களது இயக்குநர்கள் இலத்திரனியல் மூலமாக பிரயாணி பற்றிய தகவலினை அறிக்கையிடுவதற்காக சுங்கத்துடன் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும். அத்தகைய இயக்குநர்கள் இலத்திரனியல் மூலமாக பிரயாணி*

பற்றிய தகவலினை சமர்ப்பிக்கும் நோக்கில், இலங்கைச் சுங்கத்தின் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பகத்தில் பதிவு செய்து அதற்கான பதிவிலக்கம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் மற்றும் சுங்க கணினி முறைமை அணுகுகைக்கான பயனர் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்குமாக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் ஏலவே இடைநிறுத்தப்பட்ட, இரத்துச் செய்யப்பட்ட அல்லது தவிர்க்கப்பட்டிருக்கின்றவை தவிர்ந்து, இந்த ஒழுங்குவிதிகளில் உள்ள 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட பதிவு செய்த திகதியிலிருந்து இரண்டு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும்.

5. சுங்கத்துடன் தற்போது பதிவு செய்துள்ள விமான இயக்குநர்கள் இந்த ஒழுங்குவிதிகளின் செயற்பாட்டுத் திகதியிலிருந்து 2 வருடங்களின் பின்னர் தமது பதிவுகளை புதுப்பித்தல் வேண்டும்.

## பகுதி 2

## பிரயாணி பற்றிய தகவலினை முன்கூட்டி அறிக்கையிடல்

6. இப்பிரிவானது, இலங்கைக்கு வெளியிலானதொரு விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கானதொரு பிரயாணம் தொடர்பில் மற்றும் விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு வெளியிலானதொரு விமான நிலையத்திற்கான பிரயாணம் தொடர்பில் விமானத்திற்கு பிரயோகிக்கப்படுகிறது.

7. விமானமானது இறுதியாக புறப்பட்ட இலங்கைக்கு வெளியேயானதொரு விமான நிலையத்திலிருந்து அது முதலில் இலங்கையிலுள்ள விமான நிலையத்தை வந்தடையுமாயின் அல்லது இலங்கைக்கு வெளியேயானதொரு விமான நிலையத்திற்கு இலங்கையிலுள்ளதொரு விமான நிலையத்திலிருந்து புறப்படுமாயின், விமானத்தின் இயக்குநர் அவ்விமானம் பற்றிய விபரங்கள், சகல அங்கத்தவர்கள் மற்றும் விமானத்தில் பயணிக்கவுள்ள பிரயாணிகள் போன்ற விபரங்களை இலத்திரனியல் மூலமாக சுங்கத்திற்கு அறிக்கையிடல் கட்டாயமானதாகும்.

இந்த ஒழுங்குவிதியின் நோக்கங்களுக்காக, ஒரு விமானத்தில் பயணிக்கவுள்ள நபர் தொடர்பில் பின்வருவன அவசியமான தகவலாக இருக்கின்றன.

(i) குடும்பப் பெயர், முதற் பெயர் மற்றும் ஏதேனும் மத்திய பெயர் ;

(ii) பிறந்த திகதி ;

(iii) பால் ;

(iv) பிரஜாவுரிமை அல்லது தேசிய இனம் ;

(v) நபரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பயண ஆவண வகை, விநியோகிக்கப்பட்ட பயண ஆவணத்திலுள்ள நாட்டினது பெயர், பயண ஆவணத்தினது இலக்கம் மற்றும் பயண ஆவணத்தினது காலாவதியாகும் திகதி;

(vi) ஒருவருடைய முன் ஆசன பதிவு செய்த இடம் இருப்பின் அதுவும் முன் ஆசன பதிவு செய்த இடமில்லாத விமானத்தின் பொறுப்பாளர் ஒருவரினது அல்லது ஏனைய விமான பணியாளர் ஒருவரினது தன்மை விமான பணியாளர் என்பதான அறிவிப்பு.

8. பிரயாணி பற்றிய முன்கூட்டிய தகவல், இலங்கைக்கு வெளியிலானதொரு விமான நிலையத்தில் இருந்து விமானம் புறப்பட்டு அல்லது வெளியேறிய பின்னான பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் இலங்கைச் சுங்க பிரயாணி பற்றிய முன்கூட்டிய தகவல் முறைமைக்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.

9. இலங்கை விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு வெளியேயானதொரு விமான நிலையத்திற்கு புறப்படுகின்றதொரு விமானம் தொடர்பிலான பிரயாணிகள் பற்றிய முன்கூட்டிய தகவல் அத்தகைய விமானம் புறப்படவிருக்கின்றவற்றுக்காக வெளிச்செல்லுகை விடுவிப்புக்கு முன்னர், இலங்கைச் சுங்க பிரயாணி பற்றிய முன்கூட்டிய தகவல் முறைமைக்கு (ஏபிஐஎஸ்) அறிக்கையிடப்படல் வேண்டும்.

10. ஒழுங்குவிதி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரயாணி பற்றிய முன்கூட்டிய தகவல் இலங்கைச் சுங்கத்தின் அலுவலக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தி அமுல்படுத்தல் வழிகாட்டியில் விபரிக்கப்பட்டுள்ள மாதிரிகள் ஒன்றில் குறிப்பிடப்பட்டவாறாக இலத்திரனியல் மூலமாக தொடர்பினை ஏற்படுத்தல் வேண்டும்.

11. சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலத்திரனியல் மூலமான பிரயாணி பற்றிய முன்கூட்டிய தகவலினை சமர்ப்பிப்பதற்காக காலத்திற்குக்காலம் வெவ்வேறு மாதிரிகளைக் கொடுக்கலாம். அத்துடன், அத்தகைய மாதிரிகள் செய்தி அமுல்படுத்தல் வழிகாட்டியொன்றில் வெளியிடப்படும்.

### பகுதி 3

### மீறுகை

12. ஒழுங்குவிதிகள் 7, 8 அல்லது 9 ஐ மீறுகின்ற விமானமொன்றினது இயக்குநர் ஒருவர், (பொதுவானவற்றுக்குப் பின்பான/மேலதிக நிறுத்தற் காலப்பகுதி) அவற்றில் வேண்டப்பட்ட தகவலினை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அல்லது ஏதேனும் போலியான, மாற்றப்பட்ட, பூர்த்தியாகாத அல்லது பிழையான தகவலினை சமர்ப்பித்தல் சட்டத்தினை மீறுகின்றதொரு குற்றமாகும் என்பதுடன் நீதவான் நீதிமன்றத்திலான விசாரணையின் பின்னர் குற்றவாளியென தீர்ப்பின் பேரில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாததொரு தொகையைச் செலுத்துவதற்கானதொரு தண்டனை விதிக்கப்படும்.

### பகுதி 4

### தற்காலிக நிறுத்தற் காலப்பகுதி

1. பொதுவான நிறுத்துகைக் காலப்பகுதியானது, இவ்வொழுங்குவிதியின் செயற்பாடு ஆரம்பிக்கப்படுகின்ற திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதியாகும்.

2. (அ) ஒரு விமானத்தினது இயக்குநர் ஒருவர் பொதுவான நிறுத்துகைக் காலப்பகுதியானது முடிவடையும் வேளையில் அதனைத் தொடர்ந்தும் பேணும் வகையிலான மேலதிக நிறுத்துகைக் காலமொன்றை வழங்குமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுவாராயின்; மற்றும்

(ஆ) இயக்குநர் ஒருவர் பொதுவான தற்காலிக நிறுத்துகைக் காலப்பகுதியதில்,

(i) இலத்திரனியல் மூலமான பிரயாணி பற்றிய அறிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை நிறுவுதல்; அல்லது

(ii) இலத்திரனியல் மூலமான பிரயாணி பற்றிய அறிக்கைகளை மேற்கொள்ள இயலச் செய்யும் வகையில், வர்த்தக நடைமுறைகளை ஒரு இடத்தில் நிறுவுதல் அல்லது வர்த்தக முன்னேற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற நியாயமான காரணங்களைக் கொண்ட விடயங்களில் ஈடுபட்டார் என சுங்கப் பணிப்பாளர் நாயகம் திருப்திப்படுவாராயின்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம், பொதுவான நிறுத்துகைக் கால முடிவில் ஒரு மாதத்திற்கு மேற்படாததொரு **மேலதிக நிறுத்துகைக் காலமொன்றை** அறிக்கையிடுபவருக்கு வழங்கக்கூடும்.

### பகுதி 5

### தரவு இரகசியம் பேணல்

3. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் முன்கூட்டியே அறிக்கையிடப்பட்ட சகல தகவல்களும் இயல் நிலை ஒழுங்கில் உயர்காத்திடமாகவுள்ளதுடன் அத்தகைய தரவு தொடர்பிலான களஞ்சியம், நுழைவு, பாவனை மற்றும் வெளிப்படுத்தல் விடயங்களை கட்டுப்படுத்தல் மற்றும் கண்காணிப்பதில் தேவையான கண்டிப்பான நடவடிக்கைகளை இலங்கைச் சுங்கம் மேற்கொள்ளும்.

4. சுங்கப்பணிப்பாளர் தரத்திற்கு கீழ் உள்ள தரத்தில் அல்லாத அலுவலர்களால் பிரயாணி பற்றிய முன்கூட்டிய தகவல்களின் பாவனையும் நுழைவும் தொடர்பான சுங்கமும் பிற அமுல்படுத்தல் அலுவலர்களும் நுழைவில் அதிகாரமளிப்பது சம்பந்தமாக அதிகூடிய கவனமெடுத்து அதிகாரமளிக்கப்படல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.